Department of Education,Sabaragamuwa Province/ Weekly School

| | | |
|---|---|---|
| செயலட்டை 26 | பாடம்:- வணிகக்கல்வி | தரம்:13 |

தயாரிப்பு:- S. A. S. டிலக்சனி (BBA)
இ/ ஸ்ரீ கிருஷ்ணா மகா வித்தியாலயம்

வாரம் 04
25.10.2021 – 31.10.2021

# அரசுக்கும் வணிகங்களுக்கும் இடையிலான தொடர்பு மாதிரி வினாக்கள்

❖ <u>அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதுக</u>

1) "வணிக நிறுவனத்திற்கும் அரசுக்கும் இடையிலான தொடர்பு பரஸ்பரம் ஒன்றுக்கொன்று இணைந்ததாகும். இரண்டும் ஒன்றில் மற்றொன்று ஆதிக்கம் செலுத்துகின்றன ." இக்கூற்றின் உண்மை தன்மை பற்றி ஆராய்க.

2) வணிகங்களின் முன்னேற்றத்திற்கு அரசு பல்வேறு விதங்களில் பங்களிக்கின்றது . அரசின் நோக்கங்களை அடைவதற்காக வணிகர்கள் பங்களிக்கும் முறைகள் ஐந்தினை கூறுக.

3) பிசிகால் கொள்கை என்றால் என்ன?

4) உணவுப் பொருட்களில் காணப்படும் இரசாயன பொருட்களை சான்றுபடுத்துவது கட்டாயமானது, என கூறும் சர்வதேச நியமம் எது?

5) இலங்கை தரச் சான்றிதழை பெறுவதன் மூலம் வாடிக்கையாளர்களும் உற்பத்தியாளர்களும் அடைந்து கொள்ளக் கூடிய நான்கு அனுகூலங்களை தனித்தனியாக விளக்குக.

6) நேரில் வரி என்பதால் கருதப்படுவது யாது ? இலங்கையில் விதிக்கப்பட்டுள்ள இரண்டு வகையான நேரில் வரிகளை பெயர் இடுக.

7) விருத்தி முறை வரிகள் என்பதால் கருதப்படுவது யாது? உதாரணங்களுடன் விளக்குக.

8) பாவனையாளர் விவகார அதிகார சபை சட்டம் அமல்படுத்தப்பட்ட பின்னர் நீக்கப்பட்ட சட்டங்கள் யாவை?

9) கைத்தொழில் கழிவுகளை குறைப்பதற்காக உருவாக்கப்பட்ட சர்வதேச தர ஸ்தாபனத்தின் நியமம் எது?

10) கம்பனி ஒன்று தனது சகல உற்பத்திப் பொருட்களுக்கும் ஒரு பண்ட குறி பெயரை பயன்படுத்துகின்றது. அது எந்த வகையான பண்ட குறி ஆகும்?

11) பண்டகுறி என்றால் என்ன?

12) நல்ல பண்ட பெயர் ஒன்றின் சிறப்பியல்புகள் யாவை?

13) நிறுவனங்கள் தமது பண்ட குறிகளை எவ்வாறு பாதுகாக்கின்றன?

14) விலைக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பொருட்களுக்கு அதிக விலை , பொருட்களை பதுக்கி வைத்தல், ஆகியவை தொடர்பான முறைப்பாடுகளை விசாரிப்பதற்கு சட்டரீதியாக அதிகாரம் உள்ள நிறுவகம் எது?

15) பின்வருவன பற்றிய சிறுகுறிப்பு எழுதுக

- ✓ ISO 9001 :2000
- ✓ அரச பணக்கொள்கை
- ✓ சொத்து
- ✓ தேசி இலங்கை தேசிய தர இலங்கை தேசிய விருது
- ✓ அரச இறைக் கொள்கை
- ✓ நுகர்வோர் விவகார சபை

16) பண்டங்களினதும் சேவைகளினதும் விற்பனைகள் மீது விதிக்கப்படும் வரி எப்பெயர் கொண்டு அழைக்கப்படும்?

17) நுகர்வோர் விவகார அதிகார சட்டத்திற்கு அமைய விற்பனையாளர் ஒவ்வொருவரும், கொள்வனவு ஒருவருக்கு அவர் கேட்கும் பொழுது பற்றுச்சீட்டு வழங்குதல் வேண்டும். சீட்டில் எத்தகவல்கள் உள்ளடக்கப்பட வேண்டும்?

18) நுகர்வோர் விவகார அதிகார சபையின் நோக்கங்கள் மூன்றினை குறிப்பிட்டு நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக அந்நிறுவனம் செயற்படும் கருமங்கள் ஒன்றினை தருக.

19) இலங்கையில் சூழல் விவகாரங்கள் தொடர்பில் செயற்படுவதற்கான பிரதான அதிகாரத்தைக் கொண்டுள்ள நிலையம் யாது?

20) ஒரு நபரின் அதிகரிக்கும் வருமானத்தின் மீது விகிதம் சமமாக அறவிடப்படும் வரிவகை எது?

21) இலங்கையில் நுகர்வோர் பாதுகாப்புக்கென விதிக்கப்பட்டு நடைமுறையில் உள்ள சட்டங்கள் மூன்றை குறிப்பிடுக?

22) SLS நற்சான்று குறியீட்டின் மூலம் நுகர்வோர் ஒருவருக்கும் வணிகங்களுக்கும் கிடைக்கக் கூடிய நன்மைகள் நான்கினை தருக.

23) இலங்கை தேசிய தர விருதுகளை வழங்கும் நிறுவனம் எது?

24) பண்டங்களினதும் சேவைகளினதும் மீது அரசாங்கம் விதிக்கும் வரிகளுக்கு வழங்கும் பெயர் யாது?

25) ஒரு கம்பனியின் உற்பத்தி பொருள் பகுதிகள் அனைத்திற்கும் ஒரே குறி பயன்படுத்தப்படும் ஆயின் அது பெயர் கொண்டு அழைக்கப்படும்?

26) 2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க நுகர்வோர் விவகார அதிகார சட்டத்தின்கீழ் வியாபாரிகள் இணைக்க 6 குற்றங்களை குறிப்பிடுக.

27) வணிகங்களை கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் கடைபிடிக்கும் இரு பிரதான கொள்கைகளை குறிப்பிட்டு விளக்குக

28) இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் படி ஒரு கட்டளை என்பதால் கருதப்படுவது யாது?

29) கட்டளைகள் நிறுவனம் ஒன்றின் மூலம் ஒரு நாட்டுக்கு கிடைக்கக் கூடிய நன்மைகள் யாவை?

30) இறைச்சி வகைகள், கடல் உணவுகள் , என்பவற்றை ஏற்றுமதி செய்யும் இலங்கையர் கட்டாயமாக பெற்றுக் கொள்ள வேண்டிய தரச் சான்றிதழ் வழங்கும் பெயர் யாது?

31) நுகர்வோர் விவகாரங்கள் பற்றிய புதிய அதிகாரச் சட்டம் 2003 ஆம் ஆண்டிலேயே விதிக்கப்பட்ட பொழுது, வழக்கில் இருந்த மூன்று அதிகார சட்டங்கள் செல்லுபடியற்றது என இந்த மூன்று அதிகாரங்களிலும் பெயர்களை குறிப்பிடுக.

32) நுகர்வோர் விவகார அதிகார சபை உள்ள ஆறு தொழிற்பாடுகளை குறிப்பிடுக?

33) வணிகர் ஒருவர் ISO 9001 தொடர் தராதரத்தை பெற்றுக் கொள்வதனால் அடையும் நன்மைகள் யாவை என விளக்குக.

34) பண்ட குறிப்பெயர் ஒன்றுடன் போத்தலில் அடைக்கப்பட்ட தூய ஊற்று நீரை சந்தைப்படுத்த நீர் திட்டமிடுகிறார் என கருதுக . பொருளுக்கு பொருத்தமான பெயர் ஒன்றை எழுதுக . எக்காரணங்களின் அடிப்படையில் தெரிவு செய்கின்றனர் என விளக்குக.

35) சிறந்த வியாபார சின்ன பெயர் ஒன்றினால் வெளிப்படுத்தப்பட வேண்டிய செய்திகள் யாவை?

36) SLS குறியினை பெற்றுக் கொள்வதற்காக பூர்த்தி செய்யப்பட வேண்டிய தேவைகள் பன்னிரண்டினையும் குறிப்பிடுக.

37) பழரச போத்தல் ஒன்றை கொள்வனவு செய்யும் பொழுது நுகர்வோர் எனும் முறையில் உம்மை நீரே பாதுகாத்துக் கொள்வதற்கு எவ்விடயங்களை கருத்திற் கொள்வீர்.

38) இலங்கையில் நுகர்வோரை பாதுகாப்பதற்கு அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ள 6 நடவடிக்கைகளை கூறுக.

39) வணிகங்களின் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் கையாளும் பொருளாதார கருவிகள் மூன்றினை குறிப்பிட்டு அவற்றை விளக்குக.

40) கமலா வணிக நிறுவனமானது பிஸ்கட்டுகளை உற்பத்தி செய்து விநியோகிக்கிறது . உற்பத்திகளை குறிப்பிட்ட மக்கள் கொள்வனவு செய்து வருகின்றார்கள். இது தொடர்பாக நுகர்வோர்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிமைகள் நான்கினை குறிப்பிட்டு விளக்குக